வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 5186/ஆ4/2024 நாள் 26.06.2024

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழக தீர்வுப் புத்தகம் மற்றும் மாதிரி வினாத்தாள் தொகுப்பு விற்பனை மையமாக செயல்படுதல் – தகவல் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை சென்னை-6, தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழக தொலைப்பேசி வழி தகவல் நாள் 18.06.2024.

பார்வையில் காணும் தொலைபேசி வழி தகவலின் படி, வேலூர் மாவட்டம், குடியாத்தம், நடுப்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கீழ்க்காணும் தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழக தீர்வுப் புத்தகம் மற்றும் மாதிரி வினாத்தாள் தொகுப்பு விற்பனை செய்ய விற்பனை மையமாக தேர்ந்தெடுத்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தங்கள் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கீழ்க்காணும் அட்டணையில் உள்ள இருப்பில் புத்தங்களின் விலைப்பட்டியலுடன் தெரிவிக்கப்படுகிறது. விருப்பமுள்ள பள்ளிகள் தங்கள் முகப்புக் கடிதத்துடன் சார்ந்த தலைமைஆசிரியரை தொடர்பு கொண்டு புத்தகங்கள் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தலைமைஆசிரியர்களின் முகப்புக் கடிதமின்றி புத்தகங்கள் வழங்க கூடாது என குடியாத்தம், நடுப்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியருக்கு திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

| +2 பாடங்கள் | புத்தகத்தின் விலை |
|---|---|
| 12th Maths Solution English Medium | 160 /- |
| 12th Maths Come Book English Medium | 160/- |
| 10th Subjects | |
| 10th Model Question Papers ( All Subjects) EM & TM | 120/- |
| 10th Maths Solution English Medium | 175 /- |

மேற்காண் விற்பனை செய்யப்படும் புத்தகங்களை தினந்தோறும் ஒரு நோட்டுப் புத்தகத்தில் (பதிவேட்டில்) பதிந்து இருப்பில் உள்ள புத்தகங்களின் விவரங்களையும் விற்பனை செய்யப்பட்ட விவரத்தினையும் ஆய்வு அலுவலர் வரும் பொழுது முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். மேலும் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் தொகையினை வாரந்தோறும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குள் இவ்வலுவலக ஆ4 பிரிவில் ஒப்படைத்து ஆ4 எழுத்தரிடம் ஒப்பம் பெற்று கொள்ள குடியாத்தம், நடுப்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

// ஒப்பம் //

// செ.மணிமொழி//

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

பெறுநர்

தலைமைஆசிரியர்கள்

அரசு/ அரசு உதவிபெறும்/ தனியார் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்

வேலூர் மாவட்டம்.

நகல்

நடுப்பேட்டை, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியருக்கு உரிய தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.